திவுலபிடிய பிரதேச சபை - 2022
----------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

திவுலபிடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, திவுலபிடிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசினால் மாற்றப்பட்டிருந்த வருமானம் 2021 ஆண்டிற்குரிய ரூபா 19,163,956 தொகை மற்றும் 2022 ஆண்டிற்குரிய ரூபா 31,783,132 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுமானத் தேய்வுப் பெறுமதி 2021 ஆண்டின் போது ரூபா 19,502,929 தொகை மற்றும் 2022 ஆண்டின் போது ரூபா 32,767,990 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா 15,436,837 தொகை ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக, நடைமுறைச் சொத்துக்களில் இருப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நூலக புத்தகங்கள் தொடர்பான பெறுமானத் தேய்வுப் பெறுமதி கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபைக்கு சொந்தமாக காணப்படாத காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 1,882,816 தொகைக்கான 4 நிர்மாண வேலைகள் 2021 ஆண்டின் போது ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 4 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை, நிதிக் கூற்றுக்களின் படி ரூபா 57,836,945 தொகை எனினும், அட்டவணைகளின் படி ரூபா 52,456,132 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 5,380,813 இற்கான வித்தியாசமொன்று அவதானிப்பட்டது. | சரி செய்யப்பட்டு வருகின்றது என. | வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்யப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 30,148,923 தொகை பெறுமதியான 08 கணக்கு மீதிகள் அவற்றுக்குரிய அடிப்படை துணைப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | 2023.12.31 கணக்குகளில் சரி செய்யப்படும் என. | பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | 2 உப அலுவலகங்களில் 2004 ஆண்டிலும் ஒரு உப அலுவலகத்தில் 1994 ஆண்டிலும் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டு வருகின்றது. | பெறுமதி மதிப்பீட்டுத் திருத்தத்திற்காக 18,000 எண்ணிக்கையான ஆதனங்கள் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டடது என. | பெறுமதி மதிப்பீடு செய்து உரிய வீதவரி ரேட்டின் படி அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2155/08 இலக்கம் கொண்ட 2019 திசெம்பர் 24 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்டிருந்த மேல் மாகாண பிரதேச சபை நிதி நிருவாகத்துக்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான கட்டளை இலக்கம் 83(ii) | பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஊழியர் கடனுக்காக தனியார் முற்பணக் கணக்கொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் கணக்கொன்று பேணிச் செல்லப்படுகின்றன என. | நிதி விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) 371 | 2006 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை முற்பணம் என செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,793,113 தொகை 2023 மார்ச் 31 திகதி அளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்ய வேண்டிய முற்பணங்களை அறவீடு செய்யப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| | (ii) 571 | 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 334,894 தொகைகளை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | 2016 நவம்பர் 09 திகதிய LGD/13/2016 இலக்கங் கொண்ட உள்ளூராட்சித் திணைக்களம் (மேல் மாகாணம்) சுற்றறிக்கை | உடன்படிக்கை மேற்கொண்ட நாள் முதல் 03 வருடங்களுக்கு ஒரு முறை மாதாந்த வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 20 கடையறைகளுக்காக 2014 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் மீது வாடகை அறவிடப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீட்டை திருத்துவதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என. | பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு உரிய ரேட் இன் படி வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 230,033,227 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 48,140,427 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 14,269,791 | 15,636,473 | 15,268,512 | 457,961 | 15,367,940 | 15,237,903 | 13,477,792 | 2,625,303 |
| வாடகை | 7,218,558 | 7,126,474 | 7,003,131 | 59,448 | 7,331,320 | 4,304,767 | 5,668,293 | 1,742,647 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,804,000 | 1,977,584 | 1,977,584 | - | 1,801,686 | 1,297,068 | 2,071,574 | - |
| ஏனைய வருமானங்கள் | 9,992,613 | 13,614,636 | 13,614,636 | - | 65,778,930 | - | 88,997,309 | - |
| | 33,284,962 | 38,355,167 | 37,863,863 | 517,409 | 90,279,876 | 20,839,738 | 110,214,968 | 4,367,950 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டு கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திவுலபிடிய பிரதேச சபையினால் செயற்படுத்தப்படும் 2 தகன கூடங்களுக்காக 2023 மார்ச் 31 திகதி அளவிலும் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | தகனகூடங்களுக்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தற்போது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்கான ஆதனக் கணிப்பீட்டின் படி வீதவரி அறவிடப்பட வேண்டிய ஆதனங்களின் எண்ணிக்கை 16,260 தொகை என இனங் கண்டிருந்த போதிலும், 2,774 ஆதனங்களிலிருந்து மாத்திரம் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | பெறுமதி மதிப்பீட்டினை பெற்று புதிய வீதவரி ரேட் இன் படி வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏனைய கடன் பட்டோர் மீதி ரூபா 11,684,854 தொகையாகும். | அறவீடு செய்யப்படாத தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | கடன் பட்டோர் மீதியை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலவு கடன் | செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதற்கு | கடன் கொடுத்தோர் மீதியை செலுத்த |

| | | |
|---|---|---|
| கொடுத்தோர் மீதி ரூபா 33,148,658 தொகையாக இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 6,569,000 தொகை பெறுமதியான 09 ஆதனங்கள் 2022 பண்டக் கணிப்பீட்டின் போது இனங் கண்டிருக்கவில்லை. | சாதனை பத்திரம் மூலம் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள காணிகளை இனங் காண வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 2 காணிகளில் அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆதனங்களின் சரியான பெறுமதியை கணக்கீடு செய்தல் மற்றும் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் எல்லை வேலிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், மயானங்கள் புதர்கள் வளர்ந்திருந்ததுடன், பெயர் பலகை காணப்படவில்லை எனவும், அனேகமான கிணறுகள் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் மற்றும் புதர்கள் வளர்ந்து இருந்தன என அவதானிக்கப்பட்டது. | சபைக்கு சொந்தமான காணிகளில் பெயர் பலகை பொருத்துவதும் வேலிகளை சரி செய்தலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மயானங்கள் சுத்திகரிப்பு செய்யப்படும் என. | ஆதனங்கள் கால ரீதியாக பராமரிக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, இறந்துள்ள, ஓய்வு பெற்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள 19 உத்தியோகத்தர்களிடம் ரூபா 391,710 இற்கான ஊழியர் கடன் 2023 மார்ச் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஊழியர் கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |